Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருஞானசம்பந்தர் தேவாரங்களில் இசையணிகள் - ஓர் நோக்கு

செல்வி. பரமேஸ்வரிகணேசகம்பர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

56

ஆய்வுச் சுருக்கம்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மிக அதிகமான பண்களில் பாடல்கள் பாடியவர் திருஞானசம்பந்தர். இவரது பதிகங்கள் முதலாம் இரண்டாம் மூன்றாம் திருமுறைகளில் வைக்கப்பட்டுள்ளன. இவர் கையாண்டுள்ள இசையணிகளைச் சித்திரகவி என்றழைப்பர். சித்திரகவி எழுதுவதற்கு கவிநலமும் கல்விப்புலமையும் அவசியம். திருநீலகண்ட யாழ்ப்பாணார் தலங்கள் தோறும் இவருடன் சென்று இவர் பாடல்கள் பாட யாழிசை மீட்டியுள்ளார். சம்பந்தர் தனது தேவரங்களில் பல்வேறு இசையணிகளைக் கையாண்டுள்ளார். அவை ஒவ்வொன்றையும் பற்றி அவரது தேவாரங்களை மேற்கோள் காட்டி இக் கட்டுரையில் முன்வைக்கவுள்ளேன்.

முன்னுரை

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் என்று போற்றப்படும் ஞானசம்பந்தர் தேவார முதலிகளும் முதன்மையானவர். திருக்கோயில்களில் தாய்மொழியில் மெய் உணர்ந்து உளம் நெகிழ்ந்து வழிபட இத்திருமுறைகள் வழிவகுத்தன. திருஞானசம்பந்தர் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவரது பதிகங்கள் பண்ணடைவும் சொற்செறிவும் இலக்கணமும் மிகுந்த நயமும் கொண்டவையாக விளங்குகின்றன. சம்பந்தர் தமிழ்மொழியில் புதிய வகையான சொல் மாலைகள் பலவற்றை யாப்பிலக்கணத்திற்குட்பட்டு அருளிச் செய்துள்ளார். சம்பந்தர் பாடல்களில் இசையணிகள் என்னும் நோக்கில் இக்கட்டுரை முன்வைக்கபப்டுகிறது.

7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் காலத்திலிருந்து பதிகம்; வளரத் தொடங்கி மாணிக்கவாசகர் காலத்தில் மிகுந்த செம்மை பெற்றது. சங்ககாலத்தில் இறை அனுபவத்தை பரிபாடல் புலப்படுத்தியது. அடியார்களின் பக்தி இசைவடிவமாக பதிகம் அமைந்துள்ளது. திருமுறையில் பதிகங்கள் தெய்வத் தன்மை பொருந்தியவை.

திருஞானசம்பந்தர் தேவாரம் அனைத்தும் 1ம், 2ம், 3ம் திருமுறைகளில் வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தர் பாடல்களில் காணப்படுகின்ற பொதுப்பண்புகளை நோக்குமிடத்து அவரது நோக்கம் தென்படுகிறது. அவரது பாடல்களில் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மையாக இரண்டுவரிகளாவது இயற்கையை வர்ணித்து பாடுபவையாக அமைந்துள்ளன. இறைவனைப் பற்றி இரண்டுவரிகள் அமைக்கப்பட்டிருக்கும். மற்றும் தான்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பாடுகின்ற தலத்தின் சூழலை அவர் அழகுணர்வோடு பாடல்களில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும். 384 பதிகங்கள் 23 பண்களில் அமைந்துள்ளன. செந்துருத்தி பண்ணில் மட்டும் அவர் தேவாரம் இயற்றவில்லை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் மிக அதிகமான பண்களில் பாடல்கள் பாடியவர் திருஞானசம்பந்தரேயாவார். ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய காரைக்கால் அம்மையார் நைவளம் - இந்தளம் ஆகிய இரண்டு பண்களில் பதிகங்கள் பாடியமை சிறப்பிற்குரிய விடயமாகும். சம்பந்தர் தனது மூன்று வயது முதல் பதிகங்கள் பாடியுள்ளார். மேலும் 230 திருக்கோயில்களுக்குச் சென்றுபதிகங்கள் பாடியுள்ளார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் இவரோடு தலங்கள் தோறும் சென்று இவர் பாடல்களுக்கெல்லாம் யாழிசைத்துள்ளார்.

திருஞானசம்பந்தர் கையாண்டுள்ள இசையணிகளைச் சித்திரகவி என்றழைப்பர். தேவார முதலிகளுள் சம்பந்தர் தான் இவ்வகையான சித்திரகவி பாடுவதில் வல்லவர். சித்திரகவி எழுதுவது கவிநயமும் கல்விச் சிறப்பும் பெற்றவருக்கே இயலும். அவ்வகையில் சம்பந்தர் ஒருவர்தான் சித்திரகவி பாடியுள்ளார். அவையாவன மொழிமாற்று, ஏகபாதம், திருக்கோமூத்தரி, யாழ்முரி, திருவிராகம், திருத்தாளச்சதி, திருமாலைமாற்று, திருவியமம், திருவிருக்;குறள், நாலடிமேல்வைப்பு, ஈரடிமேல்வைப்பு, திருவெழுக்கூற்றிருக்கை, சக்கரமாற்று - கொண்டு கூட்டி முதலியனவாகும். இவை பற்றி விரிவாக நோக்குவோம்.

மொழிமாற்று :-

சீர்காழிப்பதியின் மற்ற தலங்களின் பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், சிரபுரம், சன்வைருகர், கொச்சைவயல், கழுமலம், ஆகிய திருப்பெயர்களைக் கொண்டு தொடுக்கப்பட்டது.

ஏகபாதம் :-

ஒரே பெயர் சொற்களைக் கொண்டு பா முழுவதும் சீர்மாறாமல் நான்கு அடியும் வருவது. ஆனால் பொருள் வேறுபடும். இவ்வகையில் ஏகபாதம் என அழைக்கப்படும் வியாழக்குறிஞ்சி பண்ணில் அமைந்த “பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்” என்ற பதிகம் இவ் அமைப்பிலே அமையப் பெற்றுள்ளது.

திருக்கோமூத்திரி

இப்பதிகம் முழுதும் காந்தாரப் பண்ணில் அமைக்கப்பட்டது. திருப்பனந்தாள் ஆதினம், அருள்நந்தி, தம்பிரான் சுவாமிகள் இதனைப் பாடும் போது பசுவின் கோமியம் விழும் சத்தத்தைக் கொண்டு இயற்றப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்.

யாழ்முரி

இப்பாடல் இயல் அமைதியாக யாப்பும் இசை அமைதியாகப் பண்ணீர்மையும் இடையிடையே முறிந்துமாறும் இயல்புடைய அடிகளால் இயன்ற இசைப்பா ஆதலில் இதனை முரிவரிக்குரிய சிறந்த இலக்கியமாகக் கொள்ளலாம். திருநீலகண்ட யாழ்ப்பாணருக்காக

அமைக்கப்பட்ட பதிகம்.

"மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடையுடைமலைமகிழ்"

இதில் நடையுடைமலைமகிழ் என்பது முறிவரிக்குரிய பகுதியாகும்.

திருவிராகம்

திருவிராகப் பாடல் யாப்பு அமைப்பில் குறில் எழுத்துக்களை நிரையிசையாக திரும்பத் திரும்ப முடுகி ஓடுகின்ற ஓர் ஓசை அமைப்பாகும். இதனை அராகம் எனவும் அழைப்பர். சம்பந்தரின் நட்டபாடை பண்ணில் அமைந்த பிறையணிபடர் சடை என்ற பதிகம் இவ்அமைப்பை பெற்றுள்ளது.

திருத்தாளச்சதி

இசைத்துறையில் "திருத்தாளச்சதி" என்னும் சந்தப் பாடல் வகையை முதன் முதலாக தந்தவர் திருஞானசம்பந்தரேயாவார். இசைஞானி, தாளச்செல்வர், சந்தப்பாவலப்பெருமான், என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் அருணகிரிநாதர் திருஞானசம்பந்தரைத் தனது குருவாகவே நினைத்து அவரது திருப்புகழில் போற்றிப் பாடுகின்றார். திருத்தாளச்சதி என்பது சொற்கட்டுச்சுவை நிறைந்த பகுதியாகும். நாட்டிய அரங்குகளில் பாடுவதற்கேற்றவகையில் அமைந்துள்ளதால் தாளச் சொற்கட்டுக்களுடன் கூடிய இப்பகுதி திருத்தாளச்சதி எனப் பெயர் பெற்றது.

உதாரணம் :- பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலே சேர்வாய் ஏனோர்கள் பயில்கண முனிவர்களும்
தந்தத்தா தந்தத்தா தனந்தனந்த தந்தனா
தானா தானா தானானா தனதன தனதனனா

திருமாலைமாற்று :-

இப்பாடலில் முதலிலிருந்து இறுதி வரையிலும் அல்லது இறுதியிலிருந்து ஆரம்பம் வரையிலும் ஒரே விதமாக வரும்படி அமைக்கப்பட்டுள்ளது.

யாமாமாநீயாமாமாயாழிகாமாகாணாகா
காணாகாமாகாழீயாமாமாயாநீமாமாயா
யாமாமாநீயாமாமாயாழிகாமாகாணாகா
காணாகாமாகாழீயாமாமாயாநீமாமாயா (சம்பந்தர் 111 - 117 – 1)

இது ஆங்கிலத்தில் "pயடiனெசழஅந" என்று அழைக்கப்படுகிறது. இப்படி உள்ள சொற்களில் ஒன்று "விகடகவி" என்பதாகும். இதன் பெயர் விளக்கம் யாதெனில் ஒரு மாலை கட்டியவுடன் அதன் ஆரம்பம், முடிவு ஒன்றும் தெரியாமல் இருக்கும் தன்மை போன்று இப்பாடலின் முடிவும் ஆரம்பமும் ஒன்றாக இருப்பதனால் திருமாலைமாற்று என்ற சிறப்புப் பெயர் பெறுகின்றது.

திருவியமகம்:-

இவ்வகைப்பாடலில் ஒரேசொல் இருமுறை வந்தாலும் இரு வேறு விதத்தில் பொருள் கொள்ளும் படிஅமையும்.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே

இங்கே“மெய்”என்ற சொல் முதலில் மேனியையும் பின் வரும் மெய் உண்மை என்னும் பொருளில் அறியப்படுகின்றது.

திருவிருக்குறள் :-

இங்கே இவ்விரண்டு அடிகளாகக் குறலடியாக வருவதாலும் “ரிக்”வேதத்தின் சாராம்சத்தைக் கொண்டதாலும் இப்பெயர் பெறுகின்றது.

“வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையிர்’ஏசல் இல்லையே”

ஈரடிமேல்வைப்பு

மேற்கூறியது போன்று இரண்டு அடிகளுக்கு ஒரு எதுகையாகிவரும்.

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே (சம்பந்தர் 111 – 5 – 1)

நாலடிமேல்வைப்பு:-

இங்குமுதன் நான்கு அடிகள் ஒரடி எதுகையமைப்பிலும் பின்வரும் ஈரடிகள் வேறு எதுகையமைப்பில் முடுகிசையாகவும் வரும். பின்னால் ஏற்பட்ட மத்யமகாலம் என்ற கிருதிகளின் அணிக்கு முன்னோடி என்றால் மிகையில்லை.

“இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடுகலந்தநஞ்சை
மிடரினில் அடக்கியவேதியனே
இதுவோ எமையாளு மாறிவதொன் றெமக்கில்லையே
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே”

திருவெழுக்கூற்றிருக்கை

இப்பாடலில் ஒன்றிலிருந்து ஏழுவரை உள்ள எண்கள் சொற்களாக வரும்படி அமையும் இவ்வெண்கள் ஏழுவரை செல்வதால் திரு–வெழு - கூற்று- இருக்கை என்றழைக்கப்

பெறும். இது ஒரு வகை சித்திரகவித்துவமாகும். இதற்கு ரதபந்தம், நாகபந்தம் என்றெல்லாம் பெயர்கள் உண்டு. சம்பந்தரைப் பின்பற்றி நக்கீரர் பின்னர் அருணகிரியார் போன்றோர் திருவெழுக்கூற்றிருக்கை பாடியுள்ளனர். இது முதலிலிருந்து இறுதிவரை பாடப்பெறவேண்டும். இந்த ஒரு பதிகத்தைப் பாடுவது சம்பந்தர் தேவாரம் முழுமையையும் ஓதியபலனளிக்கும்.

ஒருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதற் பூதலம்

முடிவுரை :-

இவ்வாறு திருஞானசம்பந்தரின் தேவாரங்களில் இசைச்சிறப்பும் தாளநயமும் மிகுந்திருப்பதைக் காணமுடிகின்றது. புதிய பண் பிறக்கவும் சந்ததாளங்கள் தோன்றவும் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தவர். “பண்ணும் பதமேழும் பலஓசைத் தமிழவையும்” என்னும் தேவாரம் அவரது இசைப் புலமையையும் தாளநுட்பத்தையும் எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது கண்கூடு.

**உசாத்துணை நூல்கள்**

1. இராமசுப்ரமணியம். வ. த
பன்னிருதிருமுறைகள்
தொகுதி 04
வர்த்தமாளடன் பதிப்பகம்,சென்னை
2. சிவபாலன். எஸ்.கே
பன்னிசைத் தத்துவம்
ஸ்ரீ கோமதிஅச்சகம்
சங்கீதாலயம்
அடையாறு, சென்னை 1993
3. சொர்ணலிங்கம். செ
ஏழிசையாய் இசைப்பயனாய்
சிவத்திருமன்றம் ,கொழும்பு 2013
4. தனபாண்டியன். ஆ
மூவர் திருமுறைப்பாடல்
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1988